## பாடம் 3 : தனித்திறமை

**வகுப்பு : III**

**பாடம் : தமிழ்**

**அ. கடினச் சொற்கள்**

1. சிங்கக்குட்டி
2. படைத்தளபதி
3. பகைவர்கள்
4. ஆமை
5. கழுதை
6. முயல்

**ஆ. பிரித்து எழுதுக**

1. சிங்கக்குட்டி = சிங்கம் + குட்டி
2. இரவுக்காவல் = இரவு + காவல்
3. சரிதான் = சரி+ தான்

**புத்தகப் பயிற்சி வினாக்கள்**

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள்________

   அ) தரம் ஆ) மரம் இ) கரம் ஈ) வரம்

2. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல்_______

   அ)நண்பர்கள் ஆ) எதிரிகள்

   இ)அயலவர்கள் ஈ) சகோதரர்கள்

AAMS KOSAVAPATTY

3. பணி இச்சொல் உணர்த்தும் பொருள்

அ) வாழை ஆ) வேளை இ) வேலை ஈ) வாளை

4.படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ)படைத்+தளபதி ஆ) படை+தளபதி

இ) படையின்+தளபதி ஈ) படைத்த+தளபதி

5.எதை+பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) எதைபார்த்தாலும் ஆ) எதபார்த்தாலும்

இ) எதைப்பார்த்தாலும் ஈ) எதைபார்தாலும்

## ஆ. வினாக்களுக்கு விடையளி

**1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?**

காட்டில் விலங்குகளின் கூட்டம் புலியின் தலைமையில் நடைபெற்றது.

**2. புலிராஜா,படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?**

புலிராஜா , படைத்தளபதி பொறுப்பை சிங்கக்குட்டிக்குக் கொடுத்தார்.

**3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?**

ஆந்தைக்கு இரவுக்காவல் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது

**4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?**

கழுதை ,ஆமை,முயல் போன்ற விலங்குகள் தகுதியற்றவை எனக் கரடி கூறியது.

AAMSKOSAVAPATTY

**5. இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?**

யாரையும் குறைவாக எடை போடக் கூடாது என்பதை இக்கதையின் மூலம் நான் அறிந்து கொண்டேன்.

## இ. புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

பதுங்கிச் செல்வேன்; பாய்ந்து இரையைப் பிடிப்பேன். நான் யார்?

இரவில் விழித்தும் பகலில் தூங்கியும் வாழ்வேன்; என் கண்களை எல்லாத் திசைகளிலும் திருப்புவேன். நான் யார்?

என் காதுகள் நீண்டிருக்கும்; வேகமாக ஓடுவேன்; கேரட் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் யார்?



ஆந்தை



முயல்



புலி

## ஈ. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக

1. **காட்டில் விலங்குகளின் நடந்தது கூட்டம்**

   காட்டில் விலங்குகளின் கூட்டம் நடந்தது.

2. **இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே**

   ஆந்தையாதே நீங்கள்தாம் இரவுக்காவல் அமைச்சர்

3. **முயல் ஓடும் வேகமாக அதி**

முயல் அதி வேகமாக ஓடும்

4. **கூடாது யாரையும் போடக் எடை குறைவாக**

யாரையும் குறைவாக எடை போடக் கூடாது

## உ. எந்த விலங்கிற்கு, எந்தப் பணி?

| விலங்குகள் | பணிகள் |
|---|---|
| 1. | பொருள்களைச் சேகரிக்கும் வேலை |
| 2. | எச்சரிக்கைப் பணி |
| 3. | படைத்தளபதி |
| 4. | இரவுக்காவல் |
| 5. | சமையல் வேலை |



## ஊ. பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குழலி பாடம் படித்தாள். | 1. குழலி<br>2. பாடம் | 1. படித்தாள் |
| 2. | அமுதன் பந்து விளையாடினான். | 1. அமுதம்<br>2. பந்து | 1. விளையாடினா |
| 3. | மரம் செழித்து வளர்ந்தது. | 1. மரம் | 1. செழித்து<br>2. வளர்த்து |